

# மேரியின் திருமகன்

## நான்கு நற்செய்திகளின் தொகுப்புரை

# மேரியின் திருமகன்

## நான்கு நற்செய்திகளின் தொகுப்புரை

எழுத்து
ஏ. கே. வேலன்

விலை ரூபாய் 3—00

ஏ. கே. வேலன் அன் சன்ஸ்
24, அருணாசலம் சாலை,
சாலிகிராமம், சென்னை-600 093.

# போற்றி

முள்ளால் முடிஎடுத்து முகத்தில் உமிழ்ந்து
சுள்ளாணி கொண்டடித்த துஷ்டரையும் நோவாமல்
மன்றாட்டு கேட்ட மரியாள் திருமகனே

தருமத்தை நிலைநிறுத்த தன்னையே விலைகொடுத்து
சிலுவையிலே உயர்ந்த தெய்வத் திருமகனே

பாவிகளை மீட்கப் பாடுகளைஏற்று
ஆவிதனைக் கொடுத்த எங்கள் ஆண்டகையே

கல்வாரி மலையும் ஒருகாவியம் ஆக
கல்லறையில் உயிர்த்தெழுந்த கருணைத் திருவிளக்கே

ஆதி மனிதன் கனிபறித்த மரத்தில்
நீதி தழைக்க நீயும் பழுத்தாயோ
காற்றும் அடங்கும் கடலும் கேட்கும்
பிணியும் ஒடுங்கும் பேயும் ஒதுங்கும்
மரித்தார் பிழைப்பார் மகத்துவத்தை என்னென்பேன்
தட்டினால் திறக்கும் கேட்டால் கொடுக்கும்
தேவனே வருக திருக்குமரனே வாழ்க

# எண்ணம்

கர்த்தரின் பெருமை கடலினும் பெரிது
முன்னம் எத்தனை எத்தனை மொழிகளில்
எத்தனை எத்தனை கவிஞர் எழுதினரோ
இன்னும் எத்தனை எத்தனை மொழிகளில்
எத்தனை எத்தனை புலவர் எழுதுவரோ
எனக்கும் ஓர்உணர்வு எழுதத் துணிந்தேன்,
அட்லாண்டிக் அண்டார்டிக் பசிபிக் என்றே
தனித்தனியே பெயர்பல சொல்லினும் அலைகடலை
பிரித்துப் பிரித்து நிறுத்தியவர் உண்டோ,
பெருங்கடற் பரப்பும் பேரலையும் ஒன்றே
அங்ஙனே மதங்கள் பலப்பல ஆயினும்
வேதங்கள் சொல்லும் போதங்கள் ஒன்றே
கிழக்கில் கிருஷ்ணன் சொன்னது கீதை
மேற்கில் கிருஸ்துவின் வார்த்தைகள் வேதம்
போதி மரத்துப் புத்தனும் சொன்னான்
மக்க மாநகரில் முகமது முழங்கினார்
நால்வரும் நல்லதல்லால் வேறென்ன சொன்னார்
சடங்குகள் சாத்திரங்கள் வேறுவேறு ஆனாலும்
சத்தியம் ஒன்றே தருமம் தருமமே
ஏசுவின் எண்ணத்தை எழுத்திலே தந்த
மத்தேயு மாற்கு லூக்கா யோவான்
நால்வரைக் கொண்டு வேலனும் சொன்னான்
இளந்தமிழில் ஏசுபிரான் சரிதம்.
வரிக்குவரி தொடர்ந்து படித்தால் உரைநடை
சீர்பிரித்து இசைகூட்டிடின் இதுவே கவிதை!

# மேரியின் திருமகன்

## உலகம் பிறந்தது

*ஆதியில் தேவன் வானைப் படைத்தான்*
*நீல வானை அழகு செய்வதற்கு*
*வைரமணிகளை வாரி இறைத்தான்*
*நிலத்தைப் படைத்தான் அது பூமியானது*
*நிலவைப் படைத்தான் இருளுக்கு விளக்கானது*
*பருதியைப் படைத்தான் பகலைச் செய்தது*
*நீரைப் படைத்தான் நெடுங்கடலானது*
*நெருப்பைப் படைத்தான் சூடும் சுடருமானது*
*காற்றைப் படைத்தான் தென்றலும் புயலுமானது*
*ஆற்றைப் படைத்தான் ஊற்றைப் படைத்தான்*
*மாநிலம் பூந்தோட்டம் ஆனது*
*நீருக்கு நீந்துவன வானுக்குப் பறப்பன*
*நிலத்துக்கு ஊர்வன நடப்பன என்றே*
*உயிர்களைப் படைத்தான் உலகம் தழைத்தது.*
*ஏழு நாட்களில் இவ்வுலகம் பிறந்ததம்மா !*

## மனிதன் பிறந்தான்

*மண்ணைப் பிடித்தான் மனிதன் ஆனான்*
*பெண்ணைப் படைத்தான் அவன் எலும்பிலிருந்து.*
*அந்த ஆதிமனிதரே ஆதாம் ஏவாள்*
*பசிதாகம் இல்லை பாவம் தெரியாது*
*தேவனின் கற்பனைக்குக் காட்சியாக*

கட்டளைக்கு சாட்சியாக வாழ்ந்தனர்
அலகை புகுந்தது நிபந்தனை மீறினர்.
பழத்தைப் புசித்தனர், ஜெகத்தைப் பெருக்கினர்
இறைவனைப் பகைத்தனர். இயற்கை என்றனர்
உருவிலே மானிடம் உணர்விலே மிருகம்
நினைவிலே ஆணவம் தலைவிரித்து ஆட
உலகம் என்பது கலகம் ஆனது.
மோயீசன் எலியாஸ் எரேமியாஸ் சாலமன்
என்று பல சான்றோர்கள் உலகுக்கு வந்தனர்
இறைவாக்கு உரைத்தனர் நீதிகளை நிர்ணயித்தனர்
ஏற்கவில்லை எதிர்நடை போட்டது ஆக
படைத்தவனுக்கே உலகம் பந்தயமாயிற்று
நாட்கள் யுகங்களாக நடந்து கடந்தது.
மலையிலே பிறவாமல் மழையிலே பெருகாமல்
ஓடும் யோர்தான் நதியின் தீரத்தில்
ஆண்டவன் அமைத்த ஏதேன் பூங்கா
யூதேயா கலிலேயா சுமேரியா எனச்சிதறி
ரோமர் வாள்நிழலில் நொறுங்கிக் கிடந்தது,
தாவீது சாலமன் ஆண்ட திருக்குலம்
வறுமைப் பிணியில் அடிமைத் தளையில்
வருந்திற்று, இறைவனுக்கு இரக்கம் பிறந்தது
மனுக்குலத்தை மீட்க மனம் வைத்தான்.

## அருளப்பரின் தோற்றம்

திருக்கோயில் உள்ளரங்கில் தூபவேளையில்
சக்கரியா முன்தரிசனம் ஆனான் கபிரியேல்

வம்சம் நீனக்குத் தழைக்க என வாழ்த்தினான்
வயது முதிர்ந்தேன் வலுவும் தளர்ந்தேன்
என்தலைவி எலிசபெத்தும் இளமை இழந்தாள்
தெய்வத் திருவாக்கு பலிப்பதெப்படியோ ?
கேள்விக்குறி எழுந்தது கிழவன் நோக்கில்
ஆண்டவர் அருளில் உனக்கு ஐயப்பாடோ ?
உண்மை விளங்கும்வரை நீஒரு ஊமை,
ஆண்டவரின் வழியை செம்மைப்படுத்தவரும்
நின்மகனுக்கு அருளப்பன் என்றபெயர் சூட்டு
எனச்சொல்லி மறைந்தான் கபிரியேல்
வெளியில் சொல்ல முடியவில்லை இவனுக்கு,
எலிசபெத் தாயான கேலிக்கு வெட்கினாள்
மலடி என்றபழி அகன்றதற்கு மகிழ்ந்தாள்

## இறைமகன் வருகை

கபிரியேல், கன்னி மரியாளுக்குத் தோன்றினான்
அன்னையே நீசெய்த புண்ணியம் என்னையோ
ஆண்டவர் உன்னோடு வாழி என்றான்
அகமகிழ்ந்தாள், அவனருளுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தாள்
தேவன் அவளுக்குத் திருமகன் ஆகும்
தித்திக்கும் செய்தி சொன்னான், திடுக்கிட்டாள்
மன்றலுக்கு வரவில்லை மங்கலம் முழங்கவில்லை
கணவன் என்கைத்தலம் பற்றவில்லை
கன்னிநான் கருத்தாங்குவதோ எனக்கலங்கினாள்
ஆண்டவன், திருவருள் அதுவென்றால், மறுப்பென்ன

கல்லுக்குள் தேரையை வளர்ப்பான், அவன்
கன்னியைத் தாயாகவும் வரிப்பான். வியப்பென்ன!
மலடியும் தாயானாள் என்றுலகம் மயங்க
எலிசபெத் இப்போது அன்னை என்பதறிக
இயற்கையை வெல்லுவதே அவனுக்கு இயற்கை
உலகை மேய்க்கவும் மீட்கவும் வருகின்றான்
அவன் பெயர் ஏசுபிரான் வாழிஎன மறைந்தான்

கன்னிமேரி எலிசபெத்தை நலம்காண வந்தாள்
வாழ்த்துக்கு வாழ்த்து பரிமாறிக் கொண்டனர்
தெய்வத்தின் விந்தைக்கு இருவரும் வியந்தனர்

மேரிக்கு நிச்சயித்த மணமகன் சூசை
கன்னியும் தாயான கதைக்கு மயங்கினான்.
அவளை மறுப்பதென்ற முடிவுக்கு வந்தான்
அன்றிரவு கனவில் அவனுக்கோர் தெளிவு,
மாதவள் தேவனுக்கு மாதா ஆவதற்கு
மாதவம் புரிந்தவள் தவறு புரியாதவள்
தள்ள வேண்டாம் தலைவி அவளே
என்றது உள்ளுணர்வு, உணர்ந்தான், மணந்தான்.

பேரரசன் கட்டளை பிறந்தது குடிமதிப்பெடுக்க
வந்தவூர்இருந்தவர் சொந்தஊர் போயினர்
சூசையும் மரியாளுடன் பெத்லகாம் சென்றார்
ஒருகுன்றின் சரிவில் கன்றின் தொழுவில்
இரவு தங்கினர் திங்கள் விளக்கெரித்தது
தென்றலும் பாடிற்று, தேன்சிந்திற்று வானம்

நன்றின் திருச்சுடரை நானிலத்துக்கு ஏற்றினாள்
தேவன் பிறந்தான், திருக்குமரன் பிறந்தான்
எங்கள் தெய்வம் பிறந்தது என்று
புள்ளினம் ஆர்த்தன, பூவினம் மலர்ந்தன.
வண்ணப் புறாக்களும் வளைய வந்தன
கழுதைகளும் எருதுகளும் காவல் நின்றன.
மெசியா பிறந்த மகிழ்ச்சியோ மகிழ்ச்சி
வான் தூதர் வந்துரைக்க மேய்ப்பரும் வந்தார்
முன்னட்டியில் பொதிந்து கிடந்த முதல்வனை
கண்டு களித்தனர் காணிக்கை செலுத்தினர்

## ஞானியர் வருகை

தேவன் பிறந்த சேதி உணர்ந்து
தூரக்கிழக்கிருந்து ஞானியரும் வந்தார்
மெசியா பிறந்தது எங்கென்று வினவினர்
வேந்தனும் வேதம் படித்த மேதையரைக் கேட்டான்
முந்தையர் இறைவாக்கு உரைத்தபடி பார்த்தால்
பெரியோன் பிரான் வந்து பிறக்க
பெத்லகாமிலும் பெரியஊர் இல்லை என்றார்
ஞானியரும் பெத்லகாம் நோக்கி புறப்பட்டார்
கள்ள மனத்து ஏரோது கரவாக
கண்டுரைத்துப் போங்களென்று கட்டுரைத்தான்

## ஞானியர் வழிபாடு

ஞானியரும் ஆண்டவரைக் கண்டு அடிபணிந்தார்
ஆராதனைக்கு தூபமிட்டார் ஆராரோ பாடினார்

பொன்னும் போளமும் காணிக்கை வைத்தார்
தேவனுக்குத் தாயானதால் தேவதையானாளென்று
வாழ்த்தினார் வணங்கினார் அமலோற்பவியை
தீராத பிணியைத் தீர்க்கும் மருந்து
ஆறாத பசியை ஆற்றும் விருந்து
அன்பு இரக்கம் சகிப்பு பச்சாதாபம்
தருமம் சத்தியம் தவம் ஞானம்
ஆகியவற்றின் மானிடப் பதிப்புதான்
இயேசு கிறிஸ்து, இமானுவேல், மெசியா,
பரிசுத்த ஆவி தந்த பாக்கியம் வாழ்க.
என செல்ல மழலையை அள்ளி எடுத்தார்
உச்சி மோந்தார் உவகை பொங்கினர்
ஏரோதின் எண்ணம் இன்னதென்று புரிந்ததால்
மீண்டும் அவனைக் காணாமல் .ஊர் சென்றார்

தலைப் பேற்றை ஆலயத்து காணிக்கையாக்க
சூசை ஏசுவுடன் கோயிலுக்குச் சென்றார்
அங்கே அன்னாள் வந்தாள் ஆசீர்வதித்தாள்
ஆண்டவரின் வருகைக்காக ஆயுள் நீடித்து
காத்திருந்த சிமியோனும் கண்டார் கண்குளிர்ந்தார்
முந்தை ஞானியர் இறைவாக்கு உரைத்தார்
இறைவன் அந்த வாக்கின்படி வந்து உதித்தார்
உலகின் பாவம் தீரும் ஆயினும்
அன்னையின் உள்ளத்தை வாள் ஊடுருவும்
அச்சோதனையே உலகை வெல்லும் சாதனை
என்று வாக்குரைத்தார் விடைபெற்றார்

எச்சரிக்கை பெற்ற சூசையும் எகிப்து சென்றார்
ஞானியரை எதிர்பார்த்திருந்த ஏரோது
காலம் தாழவே கவலை கொண்டான்
பெத்லகாமில் பிறந்த குழந்தைகள்
அத்தனையும் கொன்றுவிட ஆணையிட்டான்
தாய்மை அழுதது தரைமகள் சிவந்தாள்

## பாலயோகியின் அறைகூவல்

ஏசு எகிப்துக்குச் சென்றபின் இங்கே
அருளப்பர் பாலயோகியாய் பரிமளித்தார்
வார்க்கச்சுடன் ஒட்டக மயிராடை உடுத்தினார்
மதுவும் மாதும் அவருக்குப் புறம்பு
காட்டுத் தேனுடன் வெட்டுக் கிளியுண்டார்
யோர்தான் கரைநெடுக அலைந்தார், திரிந்தார்
பாவிகளை மனந்திருத்தி ஞான முழுக்காட்டினார்
பரிசேய சதுசேய பண்டிதர் வந்தார்
எலியாசோ மெசியாவோ நீர் யாரென்று கேட்டார்
கணக்குத் தீர்க்க கர்த்தர் வருகிறார்
''அவர் மிதியடியை அவிழ்க்கத் தகுதியற்றவன்
ஆண்டவருக்கு முன்வந்த அறைகூவல் நானென்றார்
அடிமரத்தில் கோடாரி வைத்தாயிற்று
பாவிகளே இன்றே திருந்துங்கள் இன்றேல்
பரிசுத்த ஆவி உங்களை சுட்டெரிக்கும்
உங்கள் உதடுகள் உண்மையே பேசட்டும்
குரலோ தெய்வத்தைக் கூவி அழைக்கட்டும்

கைகள் எளியோர்க்கு உதவி செய்யட்டும்
கண்களுக்கு காமக்குரோதம் வேண்டாம்
நெஞ்சிலே ஈரம், நினைவிலே தூய்மை
சொல்லிலே இனிமை விளங்கட்டும் கேளீரென்றார்
குன்றுகளும் அவர்குரலை எதிரொலித்துக்
கொண்டிருந்தன

## ஞான முழுக்கு

ஏசுவை பகைத்த ஏரோது இன்றில்லை
நாயகனை தாயகத்துக்கு அழைத்து செல்கஎன
சூசைக்கு கபிரியேல் தோன்றிச் சொன்னான்.
சூசை நாசரேத்தூரில் குடியேறினர்
அதனல், ஏசுவை **நசரேயன்** என்றழைத்தனர்
ஒருநாள், யோர்தான் நதிக்கரைக்கு வந்தார்
முழுக்காடுவார் வரிசையில் முதல்வரும் தொடர்ந்தார்
ஆண்டவரைக் கண்ட அருளப்பர் பரவசமாகி
தேவ செம்மறியே தாவீதின் திருக்குமரனே
ஆற்றுநீரால் அயலவரை புனிதப்படுத்தினேன்
ஆவியால் என்னைத் தூய்மைப் படுத்துங்கள்
என்றடி தொழுதார் அவரடியை இவர்தொழுது
'இப்போதைக்கு இதுவே நடக்கட்டும்' என்று
அருளப்பர் திருக்கரத்தால் திருமுழுக்கு ஆடினர்
''எனது அன்பார்ந்த மகன் இவரே'' என்று
வானின்ற தெய்வக்குரல் வாழ்த்தியது
தேவ ஆவி வெண்புறாவாக வந்திறங்கியது
பாலைவனத்துக்கு இட்டுச் சென்றது ஆங்கே

ஆண்டவர் நாற்பது நாள் நோன்பிருந்தார்
'கடவுளின் மகனானால் கற்களை அப்பமாக்கு'—என்று
சாத்தான் அவரைச் சோதிக்கக் கேட்டது
**அப்பத்தினால் மட்டுமன்று ஆண்டவரின்**
**வார்த்தைகளினாலே வாழ்கிறான் மனிதன்-**என்றார்'
பின்னர் கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டுபோய்
குதித்து பார் தெய்வம் காக்கட்டும் என்றது
**''கடவுளை நீ சோதியாதே என்பது வேதம்''** என்றார்
வானுயர்ந்த மலையின் சிகரத்திலே நிறுத்தி
அரசுகள் பலவற்றை வளத்தோடு காட்டி
என்னை வணங்கினால் அத்தனையும் உனக்கென்றது
**'இறைவன் ஒருவனே வணக்கத்துக்குரியவன்'**
சாத்தானே அப்பாலே போஎன்று அதட்டினார்
வான்தூதர் வந்து பணிந்தார் பணிபுரிந்தார்

இயேசு கலிலேயாக் கடற்கரையில் நடந்திருந்தார்
வலைவீசிக் கொண்டிருந்த பெலவேந்திரர் சீமோன்
போதகரே எங்கு போகின்றீர் எனக் கேட்டனர்
மனிதரைப் பிடிக்க வாருங்கள் என்றழைத்தார்
வழியில் யாகப்பரும் அவர்தம்பியும் தொடர்ந்தனர்
நாசரேத்தின் செபக்கூடம் ஒன்றிற்குள் நுழைந்தார்
வாரீர் விண்ணரசு வருகின்றது. விழித்திருங்கள்
மன்றாடுங்கள் உங்கள் பாவம் மன்னிக்கப்படும்
என்று அறைகூவினார் அவரிடம் இசயாஸ்
எழுதிய ஏட்டுச்சுருளைக் கொடுத்தனர்
விரித்தார் படித்தார் அதிலே கண்டது

**"ஆண்டவருடைய ஆவி என் மேலே**
**என்னை அபிஷேகம் செய்துள்ளார்**
**எளியவர்க்கு நற்செய்தி சொல்ல வந்தேன்**
**குருடர்க்கு பார்வை கொடுப்பேன் கூன்நிமிரும்**
**ஒடுக்கப்பட்டவர் உரிமை பெறுவார்"**
என வரிகள் தொடர்ந்தது ஏட்டைச் சுருட்டினார்
இறைபணியாளனிடம் கொடுத்து, இன்று படித்த
கருத்துக்கு காட்சி நானே என நடந்தார்
சூசையின் மகனன்றோ இவரென்று வியந்தனர்

**அற்புதங்கள்**

திருமணம் ஒன்றுக்காக கானாவூர் சென்றார்
அன்னை மரியாளும் கலந்து கொண்டார்
அங்கே விருந்து அமளிபட்டது
இடையில் திராட்சை ரசம் தீர்ந்த படியால்
அன்னை மகனிடம் ஆவன செய்யென்றார்
ஆண்டவரும் அற்புதம் செய்யத் தயங்கினார்
ஆயினும் அன்னையின் சொல்லுக்காக
கற்சாடிகளை கொண்டு வரக் கேட்டார்
நீரை நிரப்பென்றார். பந்திக்காரன் பரிமாறினான்
வெற்றுநீர் கனிச்சாறாய் இனித்தது வியந்தனர்
சாலையில் ஒருநாள் சென்று கொண்டிருந்தார்
தாவீதின் குமாரனே எங்கள்மேல் இரக்கமாயிரும்
என குருடர் இருவர் கூப்பாடு போட்டனர்
பரிந்து அவர் குறை கேட்டார். பார்வை கேட்டனர்

விழிகளைத் தொட்டார், ஒளி பெற்றனர்
கண்கிடைத்த மகிழ்ச்சியில் கைகொட்டி ஆடினார்கள்.
ஒருதொழு நோயாளி வழியில் முழந்தாளிட்டு
ஆண்டவரே நீர்விரும்பினுல் குணமாவேன் என்றான்
ஐயனும் அவன்அருகில் நெருங்கினார்.
தானொரு பாவி எனப் பதறினான்
இரங்கினார், இனிதே நலம் பெற்றான்,

கல்லறைக் காட்டில் இருவர் பேயாடினர்
அவ்வழியே எவரும் செல்ல இயலாது
அழுவார் தொழுவார் மறிப்பார் அடிப்பார்
அவ்வழியே ஆண்டவர் ஒருநாள் சென்றார்
கடவுளின் மகனே காலம் வருமுன்னே
வதைக்க வந்தீரா? எனக் குமுறினர்
எம்மை பன்றி கூட்டத்துள் ஓட்டுக,
என்றனர், ஆமென் என்றார் ஆயிற்று.
பன்றிகள் கடலிற் பாய்ந்து மாய்ந்தன.
நாயாய் அலைந்து திரிந்தவர்கள் நலமானார்.

பெரும்பாடுள்ள பெண்ணொருத்தி பின் தொடர்ந்தாள்
அவள் தின்னாத மருந்தில்லை. தேடாத தெய்வமில்லை
தேவனின் திருவடியே சரணென்று வந்தாள்
பின்னாலிருந்து அவள் மேலாடையைத்
தொட்டாலே போதுமென்று தொட்டாள்
துன்பம் தீர்ந்தாள். தொழுதாள். ஐயர்
ஆடையைத் தொட்டவர் யாரென்று துணுக்குற்றார்
பெருந்திரளில் யாரென்று தெரியாதென்றனர்

நானென்று முன்வந்தாள், நடந்ததைச் சொன்னாள்
உன்நம்பிக்கை வென்றது என்று வாழ்த்தினார்

உண்ண உறங்க அவருக்கு நேரமில்லை
பிணியாளர் அவர்கருணைக்கு பிணங்கி நின்றனர்
துன்புற்ற மக்கள் துணை என்று வந்தனர்.
என்னே இவன் பின்னே உலகம் ஓடுகிறதென
எரிச்சல் பட்டார் பரிசேயர் சதுசேயர்.

## மலைச்சாரல் அருளுரை

ஒலிவ மலைக்குன்றில் ஒன்று கூடினர் மக்கள்
ஆண்டவர் ஆங்கே திருவாய் மலர்ந்தருளினார்

''எளிய மனத்தோரே நீங்கள் பேறுபெற்றீர்
ஏனெனில் இறையரசு உங்களுக்கே ஆகும்

துன்புற்றவரே நீங்கள் பேறுபெற்றீர்
உங்கள் துன்பம் துடைக்கப்படும்

சாந்தம் உள்ளவரே நீங்கள் பேறுபெற்றீர்
உங்கள் வாழ்வு நிறைவு பெறும்

இரக்கமுடையீர் இரக்கம் பெறுவீர்.

எனக்காக உங்களைத் தூற்றுவார் தூற்றட்டும்
பொறுத்திருங்கள் உங்களை உலகம் போற்றும்

உணவுக்கு உப்புபோல் உலகுக்கு உதவுக.
சாரமற்ற உப்பு சகதியிலே கொட்டப்படும்.

மரக்காலின் கீழே விளக்கை வைப்பதுமில்லை
மலைமேலிருந்த ஊர் மறைவாயிருந்ததில்லை
ஆதலின் உலகுக்கு உதவியாய் ஒளியாய்
நல்லவராகுங்கள். நாளை என்பது இல்லை
இறைவன் உங்களுக்கு இனிமை தருவான்
இறைவாக்குகளை நான் அழிக்க வந்தவனல்ல.
திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தும் அழியாது
நடத்த வந்தேன் நடந்தே தீரும்
இருட்டில் நீங்கள் செய்யும் தவறு
வெளிச்சத்துக்கு வந்தே தீரும்
ஆண்டவன் கட்டளைகளை அனுசரிப்பவன் பெரியவன்
ஆலயத்தில் காணிக்கை செலுத்தும் முன்னால்
அயலவரிடம் மனத்தாங்கலைத் தீர்த்துக்கொள்
விபச்சாரம் செய்யாதே என்றனர் முன்னோர்
பிறபெண்ணை இச்சையுடன் பார்க்காதே என்கிறேன்
ஆணையை நிறைவேற்றன்பது ஆன்றோர் வாக்கு
ஆணையே இடவேண்டாம் என்பதே என் கட்டளை
விண்ணுலகின் மேலென்றால் அது இறைவனின் அரியணை
மண்ணுலகின் மேலென்றால் அது கடவுளின் கால்மனை
எருசலேமின் மேலென்றால் அதுசாலமனின் பொன்னகரம்
உன்தலையின் மேலென்றால் உன்னால் ஒருமுடியை
கறுப்போ வெள்ளையோ ஆக்க முடியாது.
ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறுகன்னத்தை காட்டு
மேலாடையைக் கேட்டால் உள்ளாடையையும் கொடு

**மன்னிக்கக் கற்றுக் கொள்வதே அறிவு.**
**வரம் கேட்காதே உன் தேவை அவனறிவான்**
**வழிபாடும் செபமும் உன் மனத்தோடு இருக்கட்டும்**
**வலதுகை இடுவது இடதுகை அறியவேண்டாம்**
**விண்ணரசு போல் மண்ணுலகும் தெய்வீகம் ஆக**
**ஆண்டவரை மனமார வாழ்த்து வணங்கு**
**அவர் பெயர் பரிசுத்தம் எனப் போற்று,**
*என்றின்ன பல நன்மைகளை போதித்தார்.*

*இவன் தச்சன் மகன் இத்தனை கருத்துக்கள்*
*எங்கே கற்றான் என்று வியந்தாருண்டு.*
*அதிகார போதனை ஆணவப் பேச்சு*
*இறைவன் மகன் என்பதை எப்படி ஒப்புவது*
*கண் கொடுத்தான் என்பது கண்கட்டு வித்தை*
*சாதனைகளென்பது சாத்தானின் கைவேலை*
*இவனை அழிப்பதே இனி நமக்கு வேலை*
*என முடிவெடுத்தார் பரிசேயர் சதுசேயர்.*

**அருளப்பரின் ஆரவாரம்**

*இன்னொருபால் எதிர்பார்த்த மெசியா இவர்தானென்று*
*அருளப்பர் ஆரவாரம் செய்தார்.*
*போட்டிக்கு ஒரு போதகரோ எனக்கேட்டவர்க்கு*
*இல்லை இனி நான் குறைய வேண்டும்*
*அவர்வளர வேண்டும் என்பதே திருவருள்*
*என்பணி முடிகின்றது இறைபணி அவர்முடிப்பார்*
*இளையவனின் மனையாளை தன்னரசி ஆக்கி*

ஏரோது பெருந்தவறு செய்து விட்டான்.
ஏனென்று கேட்க வாளுக்குமுன் ஆளில்லை
அன்னாஸ் கைப்பாஸ் அவனுக்குத் துதிபாடுகிறார்
எச்சரிக்கிறேன் ஏரோது திருந்தட்டும் என்றார்
அருளப்பரைக் கொல்லச் சொன்னாள் ராணி,
மக்களின் அன்புக்கு உரியவர் என்பதற்காக
அஞ்சினான் வேந்தன். கொஞ்சினாள் அவள்.
அருளப்பர் சிறைப்பட்டார். ஆயினும் நீதிசொன்னார்
வேந்தனுக்குப் பிறந்தநாள் விழா வந்தது.
ராணிமகள் சலோமி ஆடினாள் அரசவையில்
மதுக்கடலில் நீந்தி மங்கையர் முகக் கடலில்
மீனும் முத்தும் பவளமும் பார்த்திருந்த
தார்வேந்தன் தன்னரசில் பாதிதருகிறேன் என்றான்
அன்னையின் தூண்டுதலால் அருளப்பர்தலை கேட்டாள்
சபைக்குமுன் ஏரோதின் தற்பெருமை தலையசைத்தது
கொடுங்கோலின் விலையாக கொண்டு வந்தார்
தங்கத் தாளத்திலே சான்றோனின் தலையை !
நீதியழுதது நேர்மை தலைகுனிந்தது.

தூயவனை கல்லறையில் தொட்டி லிட்டார் அந்தோ !
இதுசெய்தி கேட்ட ஏசுபிரான் வெதும்பினார்

## கோயிலை விடப் பெரியது

சாலமன் நிறுவிய ஆலயப் பிரகாரத்தை
காணிக்கைப் பொருளுக்கு கடைவீதியாக்கினர்
ஆண்டவனுக்கு வீடு அர்ச்சகர்க்கு வாடகைஎன
காவலர் வரிகேட்டனர். கைக்கூலிவாங்கினர்

இந்த அவலம் ஏசுவை உறுத்தியது
கையிற் சவுக்குடன் கடைகளைப் புரட்டினார்
புறாக்களை பறக்கவிட்டார். போலிகளை விரட்டினார்
குருக்கள் வெகுண்டார். கூலிகள் கொதித்தனர்
இந்த அதிகாரம் ஏதென்று எதிர்த்தனர்
**தேவனின் மகன் நான் திருத்த வந்தேன்**
**செபக்கூடத்தில் திருடர்களுக்கு இடமில்லை** என்றார்
இறைவனுக்கு மகனா என்று எள்ளினர்
ஆதாரத்துக்கு ஒரு அற்புதம் செய்யக்கேட்டனர்
யோனாஸ் மூன்று பகலும் இரவும்
திமிங்கலத்தின் வயிற்றிலிருந்து மீண்டார்.
மனுமகனும் மண்ணுக்குள்ளிருந்து வருவார்
இந்தப் பெரிய ஆலயத்தை இடியுங்கள்
மூன்றே நாளில் எழுப்பித் தருகிறேன்
கோயிலைவிட பெரியது இங்கே இருக்கின்றதென்றார்
கோயிலை இடிப்பவன் எனக்குற்றம் சாட்டினர்.

அரசின் பகைக்கு ஆளாக்க விரும்பி
மன்னவர்க்கு வரியா? விண்ணவர்க்கு விழாவா!
எதுசரி என்று இறைமகனைக் கேட்டனர்
நாணயத்தின் ஒருபுறத்தில் ராஜமுத்திரை
மறுபுறத்தில் தெய்வச் சின்னம் இருப்பது காண்க
ஆதலின் அரசுக்குரியது அரசுக்கும்
தேவனுக்குரியது தேவனுக்கே என்றார்
அதுநேரம் தண்டல்காரர் வரிப்பணத்துக்கு வந்தார்
ஆண்டவர் அவர்களுக்கு இடறலாக வில்லை
சீமோனைக் கடலில் தூண்டிலிடச் சொன்னார்.

கிடைக்கின்ற முதல் மீனின் வாயில் கிடைக்கும்.
ஸ்தாத்தேர் என்னும் வெள்ளி காசு—அதனை
எனக்காகவும் உனக்காகவும் செலுத்துக என்றார்

ஆயக்காரன் வீட்டில் விருந்து நடந்தது
திருக்குமரன் பாவிகளோடு உண்பதாகப்பரிகசித்தனர்
பாவிகளை மீட்கவே வந்தேன்—மருத்துவன்
நோயுற்றவர்க்கே அல்லால் மற்றவர்க்கு ஏன்?
பிறப்பினால் எவனும் பெரியவன் ஆவதில்லை
ஏவல் தொழில் புரிபவன் இழிந்தவனுமல்ல என்றார்
அதுநேரம் மகதலேனாள் தேவனின் திருவடியை
கண்ணீரால் கழுவினாள் தலைமுடியால் துடைத்தாள்
பரிமளத்தைலத்தை பாதங்களில் பூசினாள்
இதைவிற்றால் ஏழைகட்கு உதவுமென்றான் யூதாஸ்
**ஏழைகள் எப்போதும் உங்களோடிருப்பர்**
**இறைமகன் இருக்கப்போவது சிலகாலம்**
அதனால் அவள்தொண்டு ஆண்டவருக்கு உகந்தது என்றார்

வீதியில் ஒரு விபச்சாரியை நிறுத்தி
மோயீசன் கல்லெறிந்து கொல்லச் சொன்னார்
போதகரே தீர்ப்பிடுங்கள் பொல்லாதவளுக்கென்றார்
ஏசு தரையில் குனிந்து எழுதியபடி
**உங்களில் பாவம் செய்யாதவன் அவள்மேல்**
**முதலில் கல்லெடுத்து போடுக** என்றார்.
கூடியிருந்தவர் நழுவினார் முடிவில்
ஒருத்தியே நின்றிருந்தாள். நானும் தீர்ப்பிடேன்
இனியும் பாவத்திற்கு ஆளாகாதே என்றருளினார்

ஒரு ஓய்வு நாளில் செபக்கூடத்தி லிருந்தார்
சூம்பிய கையன் ஒருவன் தேம்பினான்
ஆண்டவர் அவனை அருகில் அழைத்தார்
தொழுவதற்கு கையில்லை என்றதவன் கண்ணீர்
கருணைப் பெருக்கில் கட்டித் தழுவினார்.
ஆண்டவரைத் தொழ அவனுக்கு கைவந்தது
பார்த்திருந்த பரிசேயர் ஆத்திரப்பட்டார்.

ஓய்வு நாள் சட்டத்தை மீறுவதோ எனக்குமுறினார்
உங்கள் கன்று கிணற்றில் விழுந்தால்
ஓய்வு நாளென்று சாக விடுவீரா?
இறைவன் சூரியனை எரிக்கச் செய்கிறான்
காற்று வீசிக் கொண்டேயிருக்கிறது
மானிடனே உனக்கு மட்டும் ஓய்வா ?
மனுமகன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவரென்றார்

பிறிதொருநாள் திபேரியக் கடற்கரையில் அருளினார்
களைப்புற்றவர்களே என்னிடம் வாருங்கள்
இறைவன் கருணைநிழலில் இளைப்பாற்றுகிறேன்
பாரம் சுமக்க முடியாதவரே இறக்குங்கள்
நான் ஏற்கிறேன் உங்கள் நுகம் எளிதாகும் என்றார்
நல்லது செய்ய நாளை என்று தள்ளாதீர்
எதை உண்பது என்று ஏங்கி அலையாதீர்
வானத்துப் பறவைகளைப் பாருங்கள் அவை
விதைப்பதுமில்லை அறுப்பதுமில்லை.

ஆனாலும் பசித்து பட்டினியால் சாவதில்லை
உணவை விட உயிர் மேலானது அன்றோ
அன்றாட உணவை ஆண்டவர் அளிக்கின்றார்
எதை உடுப்பது என்ற கவலை ஏன் ?
காட்டுப் புல்லுக்கும் வண்ணம் கொடுத்தவன்
மானிடரை ஆடையின்றி விடுவானா ?
உடையை விட உடல் மேலானது என்றார்
அங்கிகள் இரண்டிருந்தால் அடுத்தவனுக்கு
ஒன்றைக்கொடு
இருவேளைக் குணவிருந்தால் இல்லாதவனோடு
பகிர்ந்துகொள்
நீங்கள் இரண்டொருவர் இருக்குமிடந்தோறும்
இறைவன் உங்களிடையே இருக்கின்றான்
போதித்துக் கொண்டேயிருந்தார் பொழுதாயிற்று
பசியோடு எவரையும் அனுப்ப விருப்பமில்லை
ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்
ஐயாயிரம் பேருக்கு ஆகாதென்றனர்
இறை புகழ் கூறினார். இருந்ததை பகிர்ந்தார்.
பந்தி நடந்தபின் பன்னிரண்டு கூடை மீந்தது,
இது பிதாசுதனுக்கு செய்த மகிமை என்றார்,
மக்கள் இவரை மன்னராக்கத் துடித்தனர்
சீடர்களை படகேற்றினார். இவரும் நழுவினார்
காற்றடித்தது கடல் கொந்தளித்தது
அப்போது ஒரு நவம் அலைமேல் நடந்து வந்தது
ஆவியென்றஞ்சினார். பூதமென்றோலமிட்டார்.

ராயப்பா என்ற குரல் கேட்டு தேவனென்று
உணர்ந்தனர். ஆண்டவரே என்று கூவினர்
ராயப்பர் தன்னை மறந்து அலைமேலோடினார்
அச்சமும் ஐயமும் சூழ்ந்தது அமிழ்ந்தார்
கருங்கடலினும் பெரிய கருணைக்கடல் கைகொடுத்தது
நீரும் நெருப்பும் நிலமும் ஒன்றே
நீவீர் விசுவாசத்தோடிருக்கும் வரை என்றார்

ஆகமம் தெரியாது நோன்பிருக்க மாட்டார்
ஓய்வு நாளுணராது கதிர்கொய்து கொரிப்பார்
கழுவாத பாத்திரத்தில் கைகழுவாமல் உண்ணும்
தன் சுத்தம் அறியாத பரிசுத்த பரம்பரை என்று
பரிசேயர் சீடர்களை பரிகசித்தார் ; பராபரன்
மானிடக் கற்பனைக்கு அடிமை நீங்கள்
ஆண்டவன் கட்டளைக்கு வழிநடப்பு நாங்கள்
புறத்தேயிருந்து உள்ளே செல்வது
மனிதனை மாசுப் படுத்துவதே இல்லை.
கேடான எண்ணம் கீழான நடத்தை
பொய்மை பொறாமை கொலைகளவு
விபச்சாரம் பேராசை இன்னபல தீமைகள்
மனிதன் உள்ளிருந்து வந்தே அவனை
மாசுப் படுத்துகிறது என்பதை அறியுங்கள்
ஆட்டுத்தோல் போர்த்தியிருக்கும் ஓநாய்களே
உங்கள் குள்ளமனம் திருந்தட்டும் என்றார்

லாசர் உயிர் பெற்றார்

மார்த்தாள் மரியாளுக்கு உடன்பிறப்பு லாசர்
பெத்சாயிதா ஊரினன் ஏசுவுக்கு இனியவன்.
பிணியுற்றான் இறந்தான். பேதுற்றார் சோதரிகள்
ஈதுணர்ந்த ஏசு பெத்சாயிதா புறப்பட்டார்.
துக்கம் கேட்பதற்கென்று எண்ணினர் சீடர்,
தூக்கத்திலிருந்து எழுப்புவதற்கென்றார் ஏசு.
கல்லறைக்குள் உடல் அழுகி உருக்குலைந்திருப்பவனை
உயிர்த்தெழச் செய்வது எப்படியென்றார் தோமா.
**ஆண்டவர் மகிமை உலகம் அறியவே**
**மாண்டிருக்கிறான். சாகவில்லை** என நடந்தார்
எதிர்கொண்ட மார்த்தாள் ஆண்டவரே நீர் இங்கே
இருந்திருந்தால் இறந்திருக்க மாட்டானென்றழுதாள்
ஆண்டவரைக் கண்டு மரியாள் பொருமினாள்
ஏசு மனங்குமுறினார். இறைவனிடம் கேட்டார்
**பிதாவே சுதனின், பெருமை உலகறிய**
**எனக்கினிய நண்பனை தந்திடுக** எனச் செபித்தார்
**லாசரே வாவெளியே** என அழைத்தார்.
கட்டுண்ட துணிப்பொதியாக லாசர் வந்தார்.
கர்த்தரின் கருணை நிழலில் அவருயிர் தழைத்தார்
இறந்தவன் பிழைத்தான் என்ற சேதி கேட்ட
அன்னாஸ் கைப்பாஸ் அதிர்ச்சி கொண்டார்
இனியும் ஏசுவை விட்டு வைத்தால்
எங்கள் ஆதிக்கம் அழியுமென்று சதிபுரிந்தார்

*ஆண்டவர் ஒரு நாள் ஆலயத்திலிருந்தபோது*
*தங்கம் வெள்ளி தந்தம் என்று சிலர்*
*காணிக்கை செலுத்தினர். கைம்பெண் ஒருத்தி*
*ஒடுங்கி நின்று ஒற்றைக்காசு போட்டாள்*
*மற்றவர் உபரியில் ஒரு பகுதியை செலுத்தினர்*
*இவளோ தனக்கென்று இருந்ததைப் போட்டாள்*
**ஏழையின் காணிக்கையே இறைவனுக்குப் பெரிது**
*என்றார்*

*செல்வன் ஒருவன் தேவனிடம் வந்தான்*
*நல்லவரே நான் உய்யவழி சொல்லுங்கள் என்றான்*
**இறைவன் ஒருவனே நல்லவன் மற்றபடி**
**நீ உய்ய பிறர்க்கு இட்டுஉண்** *என்றார்.*
*இடாமலே ஒருநாளும் உண்டதில்லை என்றான்*
**மோயீசன் சொன்ன முறைப்படி வாழ்க** *என்றார்.*
*கட்டளைகள் பத்தையும் கடைபிடிக்கிறேன் என்றான்*
*ஆயினும் ஓர்குறை உன்னிடம் உள்ளதென்றார்*
*சொல்லுங்கள் திருத்திக்கொள்ளுகிறேன் என்றான்*
**செல்வம் எங்கேயோ அங்கேதான் உள்ளமிருக்கும்**
**ஆதலின் உடமைகளை தத்தம் செய்துவிட்டு**
**எளியவனாய் என் பின்னே வருக** *என்றார்.*
*வாடியது முகம் வந்த வழியே திரும்பினான்*
**ஆண்டவர் சீடர்களை அழைத்துச் சொன்னார்**
**வாழ்வுக்கு செல்லும் வாயில் ஒடுக்கமானது**
**அழிவின் பாதையோ மிகவும் அகன்றது.**

ஊசிக்காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும்
பணக்காரன் சொர்க்கத்துக்கு போவது அரிது என்றார்

ஒரு நாள் மறைநூல் அறிஞன் ஒருவன்
போதகரே-நானும் பின் தொடர்வேன் என்றான்
நரிகளுக்கு வளைகளுண்டு குருவிகட்கு கூடுகளுண்டு
மனுமகனுக்குத் தலைசாய்க்கவும் இடமில்லை
என்னைப்பின் தொடர்பவன் சிலுவையுடன் வருக
என்றார்

அறுவடையோ மிகுதி ஆட்களோ குறைவு
ஓநாய்க் கூட்டத்துக்குள் ஆடுகளை அனுப்புகின்றேன்
புறாக்களைப் போன்று கபடமில்லாது
பாம்புகளைப் போன்று விவேகிகளாக
நடந்து கொள்ளுங்கள். நற்செய்தியை நவிலுங்கள்
பேயை ஓட்டுங்கள் பிணியை நீக்குங்கள்
பயணத்துக்கு பையோ மிதியடியோ கோலோ
மாற்றுடையோ கொண்டு செல்ல வேண்டாம்
உங்களை ஏற்பவன் என்னை ஏற்பான்
என்னை ஏற்பவன் இறைவனை ஏற்கிறான்
இறைவன் உங்கள் இதயத்திலிருந்து பேசுவான்
என் பொருட்டு உங்களைத் துன்புறுத்துவார்கள்
ஆன்மாவைக்கொல்ல முடியாதவர்க்கு அஞ்சவேண்டாம
ஒவ்வொருவன் தலைமுடியும் எண்ணப்பட்டுள்ளது
காசுக்கு இரண்டு குருவி விற்றாலும்
இறைவன் விருப்பமின்றி ஒன்றுகூட

**த்ரையில் விழுவதில்லை என்பதை உணருங்கள்**
**விலையின்றி பெற்றிருக்கிறீர்கள். விலையின்றியே**
**உதவுங்கள்**

**வேலையாளுக்கு உணவின் உரிமை உண்டென்று**
**சீடர்களை தூதுரைக்க அனுப்பி வைத்தார்.**

*வாதாடும் மனத்தோடு வந்த பரிசேயர்*
*பராபரனின் திருமகனிடம் பலவாறு கேட்டார்*
*மனம் ஒவ்வாத மனையாளை ஒதுக்க*
*மோயீசன் முறிவுச் சீட்டுக் கொடுக்கச் சொன்னார்.*
*போதகரே, தங்கள் கருத்து யாதென்று கேட்டனர்*
**பெற்றோரைப் பிரிந்து பெண்ணும் பிள்ளையும்**
**ஒன்றானபின் அவர் இருவரல்லர் ஓருயிர்**
**இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்**
*என்றார்*

*இறந்தவன் உயிர்த்தெழுதலை ஒப்புவதானால்*
*மூத்தவன் மனைவி அவனுக்குப் பின்னால்*
*இளையவனுக்குரியவள் என்பது மரபு*
*சோதரர் எழுவர் தொடர்ந்து இறந்தார்*
*அவளும் எழுவருடன் வாழ்ந்து இறந்தாள்*
*உயிர்த்தெழும் போது அவள் யாருக்கென கேட்டான்*
**மனித உறவும் மாமிச உடலும்**
**உயிர்த்தெழுந்தவர்கில்லை என்பதுணர்வீர்**
**விண்ணரசில் கொள்வதுமில்லை. கொடுப்பதுமில்லை**
**தேவதூதரைப் போன்றிருப்பார்** *என்றார்*

# பெரிய கட்டளை

*போதகரே திருச்சட்டத்தின் பெரியகட்டளை யாதென்றார்*

ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும் ஆன்மாவோடும்
முழு மனத்தோடும் அன்பு செய்க என்பதே.
கட்டளைகளில் பெரிய கட்டளை *என்றார்*
அடுத்து உன்மீது நீ அன்புகொண்டிருப்பது போல்
உன் அயலவன் மீதும் அன்பு செய்வாயாக
என்பதே திருச்சட்டம் இறைவாக்குகட்கு அச்சாணி
மோயீசன் இருக்கையில் இருக்கின்ற பரிசேயரோ
விளம்பரத்துக்கென்றே வேதம் படிப்பார்.
விருந்துகளில் முதலிடம் தேடுவார்
உதட்டினால் பேசுவார். உள்ளம் தொலைவிலிருக்கும்
மக்களின் வணக்கத்தை பெற விரும்புவார்
தன்னை உயர்த்துவார். பிறரைத் தாழ்த்துவார்
வெளிவேடக்கார பரிசேயருக்கு ஐயோ கேடு
கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும்
குருட்டு வழி காட்டிகளுக்கு ஐயோ கேடு
தாளத்தை கிண்ணத்தை வெளியில் கழுவுவார்
உள்ளே கொள்ளையுணர்வு குடிகொண்டிருக்கும்
வெள்ளை அடித்த கல்லறைக்கு ஒப்பாவார்.
பகட்டில் மறைநூல் அறிஞர் என்பார்
மனதில் கள்ளமும் கேடும் நிறைந்திருக்கும்

**கொடியோரின் வழி வந்தோரே உங்கள்**
**முன்னோர் தொடங்கியதை முடித்துக் கொள்ளுங்கள்**
**உங்களுக்கும் பொதுதீர்வை உண்டென்று** முடித்தார்

**மோயீசனின் அருட்காட்சி**

ஆண்டவர் ராயப்பர் யாகப்பர் அருளப்பரை
ஒருநாள் உயர்ந்த மலைக்கழைத்து போனார்.
அவரது முகம் கதிரவனைப்போல் ஒளிவீசிற்று
அவரது ஆடைகள் நிலவைப்போல் பளபளத்தன
மோயீசனும் எலியாசும் அங்கே தோன்றி
ஆண்டவருடன் உரையாடினார் அதுகண்ட ராயப்பர்
மூவருக்கும் கூடாரம் அமைப்போம் எனக்கூறினார்
ஒளிரும் மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது
**இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம்**
**நான் பூரிப்படைகிறேன். நீங்கள் செவி கொடுங்கள்**
என்று குரல் வானத்திலிருந்து வந்தது
அஞ்சினார் சீடர். ஆற்றினார் ஆண்டவர்
எலியாசும் மோயீசனும் வானில் மறைந்தனரோ
ஏசு பெருமானுடன் இரண்டறக் கலந்தனரோ
சீடர்கள் அறியாது திகைத்தனர் ஆங்கே!

ஆண்டவர் சீடருடன் திரும்பிக் கொண்டிருந்தார்
அப்போது ஒருவன் முழந்தாளிட்டு வணங்கி
என் மகன் நெருப்பிலும் நீரிலும் விழுகிறான்
அடிக்கடி வலிப்பினால் துடிக்கிறான் அவனை
சீடர்கள் குணமாக்கவில்லை என்றழுதான்

இறைமகன் இரக்கப் பட்டார்
சீர்கெட்ட தலைமுறையே எதுவரை நானிருப்பேன்
என்பால் அவனைக் கொண்டு வருக என்றார்
ஆண்டவர் காட்சியால் அவன் பேயகன்றது
தங்களால் முடியாமைக்கு சீடர் வருந்தினர்
உங்கள் விசுவாசம் உறுதியாக இருந்தால்
மலையும் நகரும் மரமும் இடம்பெயரும்
செபத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை என்றார்
ஏசு சீடர்களிடம், மக்கள் தன்னை
யாரென்று சொல்லுகின்றார் எனக் கேட்டார்
ஸ்நாபக அருளப்பர் எலியாஸ் எரேமியாஸ்
இறைவாக்கினரில் ஒருவர் என்கின்றார் என்றனர்.
நீங்கள் என்னை யாரென்று சொல்லுகின்றீர்
என்றதற்கு ராயப்பர் நீரே மெசியா
உயிருள்ள கடவுளின் மகன் என்றார்.
சீமோனே நீ பேறுபெற்றவன் இன்றுமுதல்
உன்பெயர் ராயப்பன் என வழங்கப்படும்
என் திருச்சபையை உன்மீது நிறுவுவேன்
வானகத் திறவுகோலைத் தருகிறேன் என்றார்.
மேலும் உரைத்தார் மனுமகன் எருசலேமில்
குருக்களால் வதைக்கப்படுவார் கொலையுண்ட
மூன்றாம்நாள் உயிர்த்தெழுவார் என்றதும்
சீடர்கள் சினந்தனர் ராயப்பர் வெகுண்டார்
ஆண்டவர், இறைவனின் கருத்தே முடிவென்றார்

# தட்டுங்கள் திறக்கப்படும்

அதுபோது மக்கள் சூழ்ந்து கொண்டனர்
மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்காதீர்
கறையான் அரிக்கும் கள்ளர் திருடுவார்
விண்ணுலகுக்கான செல்வம் சேர்ப்பீர்
இறைவனின் சமாதானம் உங்களோடிருக்கும்
நீங்கள் இடும்தீர்ப்பே உங்களுக்கு இடப்படும்
வழக்கை வழியிலேயே தீர்த்துக் கொள்ளுங்கள்
உங்கள் கண்ணிலுள்ள விட்டத்தை மறந்து
சகோதரன் கண்ணில் துரும்பெடுக்க வேண்டாம்
கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்
கொடுங்கள் அளக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்
அப்பம் கேட்ட பிள்ளைக்கு அப்பன்,
கல்லைக் கொடுப்பதில்லை என்பதறிவீர்
மானிடருக்கே அந்தமதி இருக்குமானால்
இறைவன் தரும் நன்மைக்கு அளவென்ன கண்டீர்
கோழி குஞ்சுகளை ஒன்று சேர்ப்பதுபோல்
உங்களை ஒன்று திரட்டப் பாடுபட்டேன்
தேவஞானம் சரியென்று நீங்கள் ஒப்பவில்லை
எருசலேம் அழியும் நாளில் அறிவீர் என்றார்
மறுமுறையும் சொன்னார் இறைமகன் எருசலேமில்
மூப்பரால் கொலைக்கு கையளிக்கப் படுவார்
ஆண்டவர் பெயரால் வருகின்றவர் வாழி

எல்லாருக்கும் நாள் வரப்போகிறது என்றார்
முழுப்பொருளும் உணராது சீடர் பதைத்தனர்
ஒலிவ மலையருகில் வந்த போது
தம் சீடர் இருவரை அழைத்தார்
எதிரே இருக்கும் ஊருக்குச் செல்லுங்கள்
கழுதை கட்டியிருக்கும் அவிழுங்கள் ஏனென்பார்
உன்னுடைய அரசர் கழுதையின் மேல் வருகிறார்
என்ற வாக்கு பலிப்பதற்கென்று சொல்லுங்கள்
மறுப்பிருக்காது ஊர்வலம் செல்வேன் என்றார்
கழுதைக்கு சேனமிட்டனர் கம்பளமிட்டனர்
வழிநெடுக மக்கள் போர்வை விரித்தார்
தழைகளைப் பரப்பினார் குருத்தோலை பிடித்தார்
முன்னே சென்றவரும் பின்னே வந்தவரும்
தாவீதின் மகனுக்கு ஓசன்னா ஓசன்னா
உன்னதங்களின் ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்
எருசலேம் நகரம் இவர் யாரென்று கேட்டது
இயேசு என்னும் இறைவாக்கினர் என்றனர்
ஆயக்காரரும் பாவிகளும் ஆண்டவரைச் சூழ்ந்தனர்
பிணியாளர் கூட்டம் பெருகிற்று. அங்கே
[illegible]ணன்று வந்தவர்க்குத் தானே மருந்தாகி
அவர் பிணிகளை ஏற்றார், நோவுகளைச் சுமந்தார்
தவற்றை உணர்ந்து தவத்தைக் கேட்டவர்க்குத்
தேவன் வீட்டுத் திருக்கதவைத் திறந்தார்:

யூதேய சட்ட வல்லுனன் ஒருவன்
ஆண்டவரின் செய்கைகட்கு ஆதாரம் கேட்டான்.

காட்டில் மேய்ந்தது ஒரு ஆட்டு மந்தை
ஆடுகளில் ஒன்று வழி தவறிற்று, மேய்ப்பவன்
நூற்றில் ஒன்று குறைந்ததற்கு வருந்தினான்
காணாத ஒன்றைக் காடெல்லாம் தேடினான்
அவன் குரலைக் கேட்டு ஆடு வந்தது
மகிழ்ச்சிப் பெருக்கில் சுமந்து வந்தான்
காணாத மறியினும் மனிதன் கேடானவனோ
தவறை உணர்ந்ததால் தந்தை மன்னிக்கிறார்
தனயன் நான் அவர் கருத்தை நடத்த வந்தேன்
இன்னும் கேள், ஒரு செல்வனுக்கு இரண்டுபிள்ளை
அண்ணன் அப்பனுக்கு உகந்தபிள்ளை
தம்பி தறுதலை தந்தைக்கு அடங்குவதில்லை
சூதாடுவான் வாதாடுவான் சொத்தில் பங்குபெற்றான்
ஆடம்பர வாழ்வில் அனைத்தும் தோற்றான்
சொத்தும் தீர்ந்தது சோற்றுக்கு வழியில்லை
பஞ்சம் வந்தது பன்றி மேய்த்தான்
இளைத்தான் களைத்தான் தந்தையை நினைத்தான்
வருவதற்கு வெட்கினான் வந்துவிட்டான்
மாண்டவன் மீண்டதற்கு மகிழ்ந்தார் தந்தை
பகைமை அகன்றது. பாசம் பெருகிற்று
அவனுக்கு அணியும் மணியும் பூட்டினார்
கொழுத்த கன்றை விருந்து வைத்தார்
உடன் பிறந்தவன் ஒதுங்கி நின்றான்
விருந்தின் ஆரவாரத்தை வெறுத்தான்
தந்தை அறிந்து தனையனை அழைத்து
ஏனடா மகனே ஏனிந்தப் புறம்பு? என்றார்

நான் கிழித்தகோடு தாண்டியது இல்லை
எதிர்த்த மகனுக்கு எத்தனை வரவேற்பென்றான்
உரிமைக்கும் உடமைக்கும் உரியவன் நீயே
உறவுக்கும் விருந்துக்கும் வந்தவன் அவன்
உடன் பிறந்தவன் திருந்தியதற்கு மகிழ்க
இழந்தவனை மீண்டும் பெற்றதற்கு மகிழ்வோம் என்றார்
வருந்தினால் திருந்தினால் வானாடு உண்டு அறிக
முன்னை இறைவாக்கினர் உரைக்கு இலக்கியமாய்
ஆண்டவருடன் மானிடர்க்கு அறுந்த தொடர்பை
மீண்டும் உயிர்ப்பிக்க வந்தேன் உணர்க
உணராத மக்களுக்கு ஐயோ கேடென்றார்

ஏசுவின் புகழ்கேட்டு ஏரோது கலங்கினான்
தான்கொன்ற அருளப்பர் தலைமுளைத்து வந்தாரோ ?
மக்களின் மந்தைக்கு அவர் மேய்ப்பர் ஆனால்
மணிமுடியும் செங்கோலும் ஏதாகுமோ என்றஞ்சினான்
அன்னாசும் கைப்பாசும் ஆத்திரப்பட்டார்
அந்தரங்கத்தில் ஆலோசனைக்குச் சபைகூட்டினார்
யூதர்களின் மதத்துக்கு அவன் பகைவன்
கொள்கைக்கு விரோதி கோயிலை இடிப்பவன்
பராபரனின் மகனென்று பாமரரை ஏய்ப்பவன்
அவனைக் கொன்றாலும் தீராதென்று குமுறினர்
பாஸ்கா திருவிழா அடுத்து வந்தது
அதுவேளை ஆண்டவரைப் பிடித்தல் ஆகாது
மக்கள் கொதிப்பார். மண்ணில் கலகம் வரும்
ஆதலின் பொறுத்திருப்பதென்று முடிவெடுத்தார்
அவர்களின் உளவுக்கு உறவானான் யூதாஸ்

## இறுதி உரை

ஆண்டவரும் மக்களிடை இறுதி உரையாற்றினார்
இறைவன் பொதுத்தீர்வை கணக்கெடுக்கப்போகின்றான்
ஆபேலிலிருந்து அருளப்பர் வரையில்
ஆன்றோர்களின் ரத்தத்தை குடித்த கொடுமைக்கு
உத்தரம் கேட்க நேரம் வந்துவிட்டது
முன்னைய நியதிஎன்று மோயிசனை பழிபோட்டு
தேவ கற்பனைகளை விற்பனை செய்வதற்கு
தண்டனை தரும்நாள் நெருங்கி விட்டது
நெருங்கிற்று அழிவு எருசலேமுக்கு என்றார்
மீட்கவந்த மெய்ப்பனை உணரவில்லை,
பசித்திருந்தேன் புசியென்று சொல்லவில்லை
தாகத்தால் துடித்தேன் குடிநீர் கொடுக்கவில்லை
உடையின்றி தவித்தேன் பழங்கந்தையும் போர்த்தவில்லை
நோயுற்று நொந்தேன் மருத்துவம் செய்யவில்லை
குருடாகித் தடுமாறினேன் கோலொன்றும் கொடுக்கவில்லை
போதனைகள் செய்தேன் செவிகொடுத்து கேட்கவில்லை
என்றதும், எப்போது நாங்கள் இறைமகனை
புறக்கணித்தோம் என்று கேட்டார்
உங்கள் வழிநடையில் வருந்தி நின்ற
எளியவனைப் பார்த்தும் பாராத போதெலலாம்
அந்தக்குறை எனக்கே வைத்தீர் என்றுணர்வீர்
ஏழைக்குச் செய்த உதவி இறைவனுக்கே செய்ததாகும்
**இறைவன் பலிகேட்கவில்லை இரக்கத்தையே விரும்புகின்றான்**
உள்ளம் கலங்காதீர், இந்த உலகுக்கு நான்

ஒளியாய் வந்தேன் என்னைப்பின் செல்பவன்
இருளில் நடவான் இடறல்பட மாட்டான்
இந்த உலகுக்கு நான்உயிராய் வந்தேன்
என்னுயிரை தன்னுயிராய் ஏற்றவனுக்கு மரணமில்லை
இந்த உலகுக்கு நான்சத்தியமாய் வந்தேன்
போரும் பிரளயமும் என்னை அழிப்பதில்லை
பொய்யும் பொல்லாப்பும் என்னை வெல்வதில்லை
பூதங்கள் ஐந்தும் தனித்தனியே பிரிந்தாலும்
என் போதனைகளில் ஒரு புள்ளியும் அழியாது
மனுமகனுக்கு மகிமை பெறும் நேரம்வந்துவிட்டது
இப்போது செல்லுகிறேன் விரைவில்வருவேன்
உலகம் முடியும்வரை உங்களோடிருப்பேன் என்றார்
எதிர் பார்த்த மெசியா இவர் தானென்று
மக்கள் ஆரவாரித்தனர் மகிழ்ச்சி கடலாயிற்று
பாவங்களின் விலை தீரும் காலம் வந்தது
பரிசுத்த துணையாளர் இங்கு வருவார்
இறைவனின் தீர்ப்பை அவர் எடுத்துரைப்பார்
நீங்கள் அழுவீர்கள் புலம்புவீர்கள் ஆனாலும்
நான் செல்லுவதே உங்களுக்கு நல்லது
மோயீசன் பாம்பை உயர்த்தியது போன்று
உயர்த்தப்படுவேன் உயிர்த்து எழுவேன்
திருமறையின் முடிவுரையும் அதுவே என்றார்

பேச்சின் ஆழம் புரியாது பேதுற்றனர்
பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு கேட்டனர்
தண்ணீர் குடமெடுத்து ஒருவன் வருவான்

அவன் ஆண்டையிடம் சென்று சொல்லுங்கள்
ஆவன செய்வான் விருந்துண்போம் என்றார்
ஆண்டவருக்கு அருகில் அமர்வது யாரென்று
வாதிட்டனர் அதைக் கேட்ட ஆண்டவரும்
இடையில் துண்டை எடுத்துக் கட்டினார்
சீடர்களின் காலைக் கழுவினார், துடைத்தார்.
பாவம் இதுவென்று பதறினர் சீடர்

**பெரியோன் என்பவன் பிறர்பணியைப் பெறுபவனல்ல**
**பிறர்க்குப் பணிவிடை புரியும் தாழ்ச்சியே**

உறுதியாகச் சொல்லுகிறேன் உங்களில் ஒருவன்
என்னைக் காட்டிக்கொடுப்பான் ஆமென்.
ஐயோகேடு அவன் பிறந்ததே தீதென்றார்
நானோநானோ எனநாணி நடுங்கினர்
பதறாத யூதாசும் பதைத்துக் கேட்டான்
சிரித்தபடி அவனைச் சென்றுவரச் சொன்னார்.
அந்தோ சாத்தான் அவனுள் புகுந்தான்
ஆண்டவர் அப்பத்தை எடுத்துப் பிட்டார்.
வாங்கி உண்ணுங்கள் இஃது என்உடல்
உங்கள் உடலில் கலந்து ஒன்றாவேன் என்றார்
பின்னர் கிண்ணத்தை எடுத்து நன்றிகூறினார்
அனைவரும் அருந்துங்கள் இஃது என்ரத்தம்
உங்களுக்குப புதிய உடன்படிக்கை என்றார்
நாளைய பொழுது உங்களுக்கு நல்லதல்ல
எதிரிகள் வலுத்திருப்பார் இறைமகனை இழந்திடுவீர்
என்றதும் சீடர்கள் பதைபதைத்தார்
ராயப்பர் என்கையில் வாளுண்டு என்றெழுந்தார்

தோழனே கோழிகூவு முன்னால் என்னை
மூன்றுமுறை மறுதளிப்பாய் என மறுத்தார்
ஆண்டவருடன் இறப்போம் எனக் கொதித்தனர்
என்னைத் தனியே விட்டு ஓடுவீர்கள்
ஆனாலும் தந்தை என்னோடிருப்பார்.
மனுமகன் மகிமைபெறும் நேரம் இதுவே
உலகை நான் வென்றுவிட்டேன் என்றார்.

**இறைமகனைப் பிடித்தனர்**

பின்னர் ஒலிவமலைச் சாரலுக்குச்சென்று
கெத்சேமனித் தோட்டத்தில் செபித்திருந்தனர்
மகிமை பொருந்திய எனது தந்தையே
மண்ணுக்கு என்னை அனுப்பினவரும் நீரே
விண்ணுக்கு என்னை அழைப்பவரும் நீரே
வந்த பணி தீர்ந்ததையா, வருகின்றேன் !
வாழ்ந்து காட்டினேன் வார்த்தைகளால்
இந்த உலகை அளந்து காட்டினேன்.
உணர்ந்தவர்கள் உண்டு உணராத சிலருக்கு
உதிரம் சிந்தி காட்டுகிறேன். இது உறுதி !
ஊனுடலும் மானிடமும் போதுமென்றால்
மறுப்பில்லை என் விருப்பம் எதுவும் அன்று
நின் விருப்பமே நிறைவேறட்டும் என்றார்.
மனங்கனிந்தார் மண்ணில் கவிழ்ந்தார் மன்றாடினார்
துயரத்தின் உருக்கமோ தூக்கத்தின் கலக்கமோ

செபித்திருந்த சீடருக்கு விழித்திருக்க முடியவில்லை
எழுப்பினார் ஆண்டவர் எதிரே படை வந்தது
மனுமகனை அடையாளம்காட்ட ராபி என்று
முழந்தாளிட்டு முத்தமிட்டான் யூதாஸ்.
இவர் எதுக்கு வந்தீரென்றார்.
அவர் ஏசுவைப் பிடிக்க என்றார்.
நீங்கள் தேடிவந்த ஏசு நான்தான்.
இவர்களைப் போக விடுங்கள்
நாடெல்லாம் சுற்றினேன். நாளெல்லாம் போதித்தேன்
என்னைப் பிடிக்க இரவில் வந்ததேன் என்றார்
மால்குஸ் ஆண்டவர்மீது கைவைத்தான்.
மறுகணம் ராயப்பர் அவன் காதறுத்தார்
உருவிய வாளை உரையிலே போடச்சொல்லி
அறுந்த காதை பொறுத்தினார் அருளினால்
சீடர்கள் சிலர் நழுவினர் சிலர்ஓடினார்
தேவனின் திருமகனை சிறைப்பிடித்தனர் அங்கே

அன்னாஸின் முன்னே கொண்டு நிறுத்தினர்
ஏதுபிழை செய்தேன் எதற்கென்னை பிடித்தீர்
குருடர்க்குப் பார்வை கொடுத்தது குற்றமா?
தொழு நோயாளி துயர் தீர்த்தது தவறா?
பிணிகளைப் போக்கினேன். சாவுகளை மீட்டேன்
பொய்யை வெறுத்தேன் பொல்லாங்கை மறுத்தேன்
இதிலே எது தீமையானதெனக் கேட்டார்
இந்த சித்துக்கள் வித்தைகள் என்பதறிவோம்

நீ வேதம் படித்தவன் அல்ல என்றார் ஒரு பண்டிதர்
என் வார்த்தைகள் அனைத்தும் வேதம் என்றார்
இந்த செறுக்கிற்கே சிறைப் பிடித்தோம்
இறைவன் மகன் என்று சொன்ன
ஆணவத்தை மன்னிப்பதற்கில்லை என்றார்
என் தந்தையை நானறிவேன் அந்த
உண்மையை உலகறியச் சொன்னேன்
முந்தை இறைவாக்கினரின் வாக்குகளை தொகுத்துப்பார்
வரிக்குவரி நானே தெரிவேன் என்றார்
கடவுளுக்கு மகனானால் கைதியானதேன் என்றனர்
நினைத்தால் நெருப்பு மழையாகப் பொழியும்
கடல் பொங்கிவரும் காற்று சுழன்றடிக்கும்
அந்தக் கொடுமைக்கு நல்லவரும் மாய்வார்
அறியாத மக்களும் அழிவார் ஆதலின்
கட்டுண்டேன் இன்னும் நீர்திருந்தக் காத்திருக்கிறேன்
என்றார். ஆத்திரக்காரன் ஒருவன் அறைந்தான்
மூர்க்கன் ஒருவன் முகத்தில் உமிழ்ந்தான்
கூண்டிலே நடுவனை நிறுத்தி குற்றவாளி
தீர்ப்பிடும் நெறிகெட்ட நிலைக்கு ஆளானார்
கோயிலை இடிக்கச் சொன்ன நிந்தனைக்கு
இவனைக் கொல்லுக என்று கூவினார்
சத்தியம் சொல்லுக நீர்தான் மெசியாவோ ?
அற்புதத்தைக் கண்டீர் ஆணவத்தை திருத்தினேன்
அப்போதும் உணரவில்லை என்றால் இறைவனின்
வலப்பக்கத்தில் அமர்வேன் அறிக என்றார்.
இதுபெரிய தேவநிந்தனை மன்னிப்பில்லை என்று

அன்னாஸ் தன்உடையைக் கிழித்துக் கொண்டார்
உடனிருந்தோர் கொல்லுக கொல்லுகவெனக் கூவினர்

முற்றத்தில் காவலர் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர்
வந்த ராயப்பரை வழிமறித்தாள் ஊழியக்காரி
ஏசுவின் சீடரில் இவனொருவன் என்றாள்.
இல்லை இல்லைஎன வெளிநடந்தார் வெட்கினார்
வாசலில் காத்திருந்தார். காவலன் ஒருவன்
நசரேயனோடு இவனைக் கண்டதாக நினைவென்றான்
இல்லை என்று மறுத்தார். மனம்நொந்தார்
மால்குஸின் உறவினன் ஒருவன் மறித்து
காதறுத்தவன் இவனே என்றான். இல்லைஎன்றார்.
இதயம் பொங்கி வழிந்தது, கண்ணீராக.
குமாரன் உரைக்கபடியே கோழியும் கூவிற்று

## ஞானப் பேரரசு

பொழுது புலர்ந்ததும் புரட்சிகாரன் என்று
பிலாத்தின் முன்னால் கொண்டு நிறுத்தினார்
புதியதோர் அரசு அமைப்பதாக மக்களை
திசை மாற்றுகிறான் எனவழக்குரைத்தார்
வேந்தனும் ஏசுவை விடை கேட்டான்
**என்னரசு ஞானப் பேரரசு வேதம்**
**அதன் சட்டம் அன்பும் சகிப்பும் நடைமுறை**
ஒப்பமுடியாதவர் பகைக்கின்றார் என்றார்
பிலாத்து அவர்பேச்சில் பிழைகாணவில்லை
மதத்தை மதிப்பதில்லை அழிக்க நினைக்கிறான்

தெய்வக் கோட்பாடுகளை சிதற அடிக்கிறான்.
இறைமகன் தானென்று இறைவனைப் பழிக்கிறான்.
ஆதலின் தண்டனைக் குரியவன் என்றனர்.

மதத்துக்கு எதிர்ப்பென்றால் குருக்கள் கேட்கட்டும்
வேண்டாத விசாரணை இங்கே வேண்டாம் என்றான்
எங்களுக்குக்கொல்ல அதிகாரமில்லை
கொண்டு வந்தோம் கலிலேயனை என்றார்
அவனொரு கலிலேயன் என்றதும் பிலாத்து
ஏரோதின் அரசுக்கு இட்டுச் செல்லுக என்றான்.
எருசலேமுக்கு ஏரோதிடம் இழுத்து வந்தனர்
ஏசுவின் புகழைக் கேட்டிருந்த ஏரோது
அற்புதங்கள் செய்வார். அறிவுரைகள் ஆற்றுவார்
ஆசி வழங்குவாரென்று அறிவுரைகள் எதிர்பார்த்தான்.
அவர்தவத்துக்கு மோனச்சிலையாக நின்றார்
ஞான விளக்காக எரிந்தன விழிகள்
மவுனம் நிரபராதி என்று சொல்லிற்று.
சாந்தம் மனதிலே வணங்க வைத்தது.
சான்றோனாகத் தெரிகின்றார். சத்தியமே ஜொலிக்கிறது
குற்றம் புரிந்திருந்தால் பிலாத்து விட்டிருக்கமாட்டான்
ஆனாலும் கேட்கின்றேன் இவர்களுக்கு என்னபதில்
பேசுக என்றான். அவர் பேசவில்லை
ஊமையை பேச வைத்த நீர் ஊமையாக நிற்பதேன்?
உண்மைக்கு சாட்சி எங்கே என்று அதட்டினான்
அருளப்பரின் ஆவியே என்சாட்சி என முறுவலித்தா
வேந்தனுக்கு முகம் வியர்த்தது அதிர்ந்தான்
பிலாத்தின் ஆளுகையில் பிடித்திருக்கின்றீர்

ஆங்கே செல்லுக என்று ஆணையிட்டான்
படைமறவர் ஆண்டவரை சிகப்பில் உடுத்தினார்
முள்ளால் முடிதரித்து எள்ளி நகைத்தார்.
மூங்கில் ஒன்றை செங்கோலெனக் கொடுத்தார்.
தேவனே உன் தீர்க்கதரிசனம் எங்கே
யூதரின் அரசே உன் ஆளுகை எங்கே
என்ற கேள்வியும் கேலியுமாக
மீண்டும் பிலாத்திடம் கொண்டு வந்தனர்
பிலாத்துக்கு வேதனை பெரிதாயிற்று
மன்றிலே நின்றிருந்த மனுமகனைக் காட்டி
சாட்டுகின்ற குற்றம் எதுவும் தெரியவில்லை.
சாவுக்குரியதொன்றும் அவர் செய்யவில்லை.
தண்டித்து விடுதலை செய்வேன் என்றான்
மூப்பரின் தூண்டுதலால் ஏற்பட்ட கூக்குரல்
ஏசு ஒழிக நசரேயன் ஒழிக
சீசரின் எதிரியை எருசலேமின் பகைவனை
சிலுவையில் அறைக சிலுவையில் அறைக என்று
ஆரவாரித்தனர் வானைப் பிளந்தது கூக்குரல்
பெரியதொரு தீமை விளையப் போகிறதென்று
பிலாத்தின் மனையாள் கலக்கமுற்றாள்
இறைமகனுக்குத் தீங்கிழைக்க லாகாதென
அரசனுக்குத் தகவல் அந்தரங்கத்தில் அனுப்பினாள்
பாஸ்கா விழாவை முன்னிட்டு ஏசுவை
விடுதலை செய்வோம் என்றான் ஒப்பவில்லை

அங்கு ஆர்ப்பாட்டம் போர்ப்பாட்டாயிற்று
வேந்தன் மனம் நொறுங்கிச் சொன்னான்
**ஆரவாரத்தில் அநீதி நீதியாவதில்லை.**
நல்லவன் சாவுக்கு நான் பொறுப்பல்ல
உங்கள் முடிவுக்கே விடுகிறேன் என்றான்
கொலைகாரன் பரபாசுக்கு விடுதலைக் கேட்டனர்
கிறிஸ்துவுக்குச் சிலுவை சிலுவை என்றனர்
ஆமென்றான் ஆண்டவர் மேல் சாட்டைகள்
அழியாத கோலமாக அடையாள மிட்டன
அப்போதும் அவர்கள் அறியாமைக்கு இரங்கினார்
சாத்தான் வேதம் ஓதியது அந்தோ
தர்மம் தலை குனிந்தது, அம்மா !
ஆண்டவர் நிமிர்ந்து நடந்தார் ஆங்கே

**கல்வாரிப்பயணம்**

சிலுவையை ஏசுவின் தோளிலே ஏற்றி
கல்வாரி மலைக்கு நடத்திச் சென்றனர்,
ஆண்களும் பெண்களும் அழுதபடி தொடர்ந்தனர்
எருசலேம் மனிதரே எனக்காக அழாதீர்
உங்களுக்காக உங்கள் பிள்ளைகளுக்காக அழுங்கள்
ஒருநாள் வரும் அன்று மலடி பேறுபெற்றவள்
பச்சை மரத்துக்கே இந்த பாடென்றால்
பட்டமரத்துக்கு என்ன கேடோ என்றார்
அடித்து நடத்தினர். உலகின் பாவத்தை

சுமந்து நடந்தார் ரத்தம் வியர்த்தது
தட்டுத் தடுமாறி தளர்ந்து விழுந்தார்
வேதனை மிகுந்த வெரோனிகா துணிந்து
ஈரத்துணியால் முகத்தை ஒற்றி எடுத்தாள்
ஏசு தனது ரத்தத்தில் சித்திரம் ஆனார்

கல்வாரியில் கசந்த காடி கொடுத்தனர்
குடிக்க மறுத்தார் கொடுமையை சகித்தார்
ஆண்டவரை சுள்ளாணி கொண்டு அடித்து
சிலுவைக்கு மேல் யூதருக்கரசன் ஏசு
என்ற பத்திரம் எழுதிப் பொருத்தினர்.
பரிசேயர் சிலர் நீதேவனின் மகனானால்
சிலுவையிலிருந்து இறங்கிவா என்றனர்
இடித்த கோயிலை எழுப்பித் தருவோனே
இப்போது உன்னையே நீ காப்பாற்றிக்கொள்
என நகைத்தனர். நல்லவர் அழுதார்

உள்ளத்தில் பொங்கி எழும்ஊற்றாலே
உலகின் ஆன்ம தாகத்தை தணித்தவருக்கு
காடியிலே தோய்த்து காளானை நீட்டினார்
மறுத்தார், மழைத்துளிகள் வந்துதவின
தாய்மை கண்ணீர்த் துளிகளாக கரைந்துருள்
கலங்காத மகனுக்கு கலங்கிநின்ற அன்னையை
அருளப்பனுக்கு இதோ உன்தாய் என்றார்.

**அன்னைக்கு இதோ உன் மகன்** என்றார்.
கொலைக்குன்றில் சூழ்ந்திருந்த மக்களை
காவலர் துரத்தினர். காலமும் துரத்திற்று.
ஆண்டவரின் உடைக்கு சீட்டுப் போட்டனர்
இருண்டது வானம். மருண்டனர் காவலர்
இரண்டாகக் கிழிந்தது தேவன் கோயில்திரை!
இயற்கை அதிர்ந்தது. இறை மகனும் இறைஞ்சினார்.
தந்தையே! நான் தரவேண்டிய விலை என்னவோ
நேரமிகுந்தது, இன்னும் பூத உடலில் புழங்கவோ
உமது கையில் எனது ஆவியை
ஒப்படைக்கிறேன் என்று உரக்கக் கூவினார்
இறைவனும் இவரை மகிமைப்படுத்தினார்

**தெய்வ மலர்**

விழித்தெழுந்த காவலர்க்கு ஏசு இறந்திருந்தார்,
ஈட்டிக் கொண்டு ஊடுருவக் குத்திப்பார்த்தார்
ஆண்டவரிடம் பற்று மிகுந்திருந்த சூசை
அரசனிடம் அனுமதி பெற்று வந்தார்
சிலுவையிலே பூத்த தெய்வ மலரை
பறித்து மரியாளின் மடியிலிட்டார்
அவர் தனக்கென்று அமைத்திருந்த கல்லறையை
தேவனின் திருச்சடலம் குடியிருக்கக் கொடுத்தார்
அடக்கம் செய்தனர் அடங்கவில்லை துக்கம்

## உயிர்த்தெழுந்தார்

மூன்றாம் நாள் ஆண்டவரை அலங்கரிக்க விரும்பி
மகதலேனாள் பரிமளப் பொருளோடு வந்தாள்
கல்லறை வாயில் திறந்து கிடந்தது
அவர்உடல் இல்லை உடைமட்டும் கிடந்தது.
தேவனுடல் திருட்டுப் போயிற்றோ
பரிசேயப் பகைவர் எடுத்து மறைத்தனரோ
அலமந்தாள். அங்கும் இங்கும் தேடினாள்
தேவதூதன் ஒருவன் அவளுக்குத் தோன்றினான்
வருந்துகின்ற மாதே மகிழ்ந்திடுக நற்செய்தி
ஏசுபிரான் உயிர்த்தெழுந்தார் உணர்க
ஊருக்கு உரைத்திடுக உண்மை பிழைத்தது என்றான்
என் ஆண்டவரை நான் எப்போது காண்பேன்
எங்கே காண்பேன் என்று கேட்டபடி நடந்தாள்
ஒரு தோட்டக்காரன் அவளுக்கு எதிர்பட்டான்
**நீ அவரை நினைத்தால் நெஞ்சிலே தெரிவார்**
**நேர்ப்பட்டால் உனக்கு எதிரே வருவார்**
என்றதும் இது ஆண்டவரின்குரல் என்றாள்
இறைமகன் உயிர்த்தெழுந்த சேதிக்கு
ஊரே திரண்டு வந்தது அதனால்
கல்வாரி மலையும் ஒரு காவியம் ஆயிற்று

அன்னாசும் கைப்பாசும் அதிர்ச்சி கொண்டார்
ஆனாலும் நம்பவில்லை வதந்தி என்றார்

மாசற்ற ரத்தத்தை சிந்த வைத்த
பாவமிது தானென்று குறைபட்டான் யூதாஸ்
உன் கேட்டுக்கு விலை கொடுத்து விட்டோம்
பாவத்துக்கு நீயே பொறுப்பென்று புறக்கணித்தார்
கைக்கூலிக்காசை கைப்பாசிடம் வீசினான்
தானும் கொன்றதோ நாண்டு கொண்டான்

எருசலேமில் நடந்த கதைக்கு வியந்தபடி
கிளயோபா நண்பருடன் எம்மாவூர் சென்றுகொண்
டிருந்தார்
புதியவர் ஒருவர் உடன்நடந்து உரையாடினார்
இறைமகன் என்றுணராது எதிர்வாதம் புரிந்தனர்
ஊர்நெருங்கியது உருக்காட்டி மறைந்தார்
பயணத்துக்கு இறைவன் துணைவருவான் என்றுணர்க
கலிலேயப் பட்டணத்தில் கர்த்தரின் சீடர்
அடைத்த கதவுக்குள் காத்திருந்தார் அப்போது
ஆணி தொளைத்த கரத்தில் விரலிடுவேன்
அல்லது ஐயம் தீராதென்றார் தோமா
உங்களுக்குச் சமாதானம் என்றகுரல் கேட்டது
எதிர்பாராத படிக்கு இறைமகன் தோன்றினார்
தோழனே ஆணியிட்ட துளையிங்கே
உன் விரலெங்கே என்றுவினவினார் தோமாவை
தலைகுனிந்த தோமா தேவனின் தாள்பணிந்தார்
கண்டு விசுவசிக்கின்ற உங்களிலும்
காணாமலே நம்புகின்றவர் பேறுபெற்றோர்
இன்னும் உணரச் சொல்லுகின்றேன் உணர்க
மனுக்குலத்தை மீட்கவந்த மேய்ப்பன் நானே

**உங்கள் துயரத்துக்குச் சுமைதாங்கி யானேன்**
**உலகின் பாவத்தை என் ரத்தத்தால் கழுவினேன்**
**சாத்தானை வென்றேன் சத்தியமாய் நின்றேன்**
**துன்பம் என்னைத் தொட்டதில்லை**
**மரணத்தை வென்றேன் மனுமகனே இறைமகன்**
**உயிரும் நானே உயிர்ப்பும் நானே**
**ஒளியும் நானே உண்மையும் நானே**
**பிதா சுதன் பரிசுத்த ஆவியினும்**
**பெரிய மந்திரம் வேறு இல்லை**
**சித்தத்தை என்பால் வைத்து செபித்திருங்கள்**
**துன்புறும் வேளையில் சிலுவையாய் தெரிவேன்**
**உலகம் முடியும் வரை உங்களோடிருப்பேன்**
**அன்பே வழித்தடம் சகிப்பே இருப்பிடம்**
**தொண்டே என்பணி தொடருங்கள்** *என்றருளினார்*
*பெத்தானியா நோக்கிச் சென்றனர். அங்கே*
*பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பினார்*
*சீடர்களும் தெளிந்தார் தேவர் ஆனார்*
*அனைவரும் காண ஆண்டவரும் மனுமகனாக*
*வானகத்துக்கு எழுந்துச் சென்றார், வாழிய*
*ஆலயங்கள் ஆண்டவரின் திருப்புகழைப் பாடிற்று*
*செபக் கூடங்கள் தேவனின் திருநாமத்தை ஓதிற்று*
*கருத்தரின் கருணை வெள்ளம் கரைபுரண்டது*
*ஏசு கிறிஸ்து இறை மகன் மெசியா*
*என்ன பேரிட்டாலும் தேவன் ஒருவனே*
*வாழ்த்தி வணங்கி வாழ்வோம் யாமே*

□ □ □

# சின்னக் குறிப்பிடம்

இணைப்பு

# சின்னக் குறிப்பிடம்

## 1. அர்ச். சிலுவை மந்திரம்

அர்ச். சிலுவை அடையாளத்தினாலே, எங்கள் சத்துருக்களிட மிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுரா! பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென்.

## 2. ஆறு இலட்சணங்கள்

1. சர்வேசுரன் தாமாயிருக்கிறார்.
2. துவக்கமும் முடிவும் இல்லாமலிருக்கிறார்.
3. சரீரமில்லாமலிருக்கிறார்.
4. அளவில்லாத சகல நன்மை நிறைந்தவராய் இருக்கிறார்.
5. எங்கும் வியாபித்திருக்கிறார்.
6. எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராயிருக்கிறார்.

## 3. கர்த்தர் கற்பித்த செபம்

[பரலோக மந்திரம்]

பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப் படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தின்மை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும், எங்களைச் சோதனையில் விழவிடாதேயும், தின்மையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். ஆமென்.

## 4. மங்கள வார்த்தை செபம்

[அருள் நிறைந்த மந்திரம்]

அருள் நிறைந்த மரியே வாழ்க, கர்த்தர் உம்முடனே; பெண் களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சியசிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும். ஆமென்.

## 5. விசுவாசப் பிரமாணம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் இயேசு கிருஸ்துவை விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கற்பமாய் உற்பவித்துக் கன்னி மரியாயிடமிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கஞ் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையை விசுவசிக்கிறேன். அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமுதீதப் பிரயோசனத்தை விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய சீவியத்தை விசுவசிக்கிறேன். ஆமென்.

## 6. பத்துக் கற்பனைகள்

சர்வேசுவரன் நமக்கு அருளிச் செய்த வேத கற்பனைகள் பத்து

1. உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே. நம்மைத் தவிர வேறே சர்வேசுரன் உனக்கு இல்லாமல் போவதாக.
2. சர்வேசுரனுடைய திருநாமத்தை வீணாகச் சொல்லாதிருப்பாயாக.
3. சர்வேசுரனுடைய திருநாட்களைப் பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக.
4. பிதாவையும் மாதாவையும் சங்கித் திருப்பாயாக.
5. கொலை செய்யாதிருப்பாயாக.

6. மோக பாவம் செய்யாதிருப்பாயாக.
7. களவு செய்யாதிருப்பாயாக.
8. பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
9. பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக.
10. பிறர் உடமையை விரும்பாதிருப்பாயாக.

இந்தப் பத்து கற்பனைகளும்
இரண்டு கற்பனைகளில் அடங்கும்

1. எல்லாவற்றிற்கும் மேலாக சர்வேசுரனை நேசிப்பது.
2. தன்னைத்தான் நேசிப்பதுபோல பிறரையும் நேசிப்பது.

## 7. திருச்சபைக் கட்டளைகள்

1. ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழுப் பூசை காண்கிறது.
2. வருடத்துக்கு ஒரு முறையாவது நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்கிறது.
3. பாஸ்கு காலத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து தேவநற்கருணை உட்கொள்கிறது.
4. சுத்தபோசன நாட்களில் சுத்தபோசனமும் ஒரு சந்தி நாட்களில் ஒரு சந்தியும் அனுசரிக்கிறது.
5. விலக்கப்பட்ட காலத்திலும், குறைந்த வயதிலும், விக்கினமுள்ள உறவு முறையாரோடும் கல்யாணம் செய்யாதிருக்கிறது.
6. நம் ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவி செய்கிறது.

## 8. உத்தம மனஸ்தாப மந்திரம்

சர்வேசுரா சுவாமி தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராகையால், எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் முழுமனதோடு நேசிக்கிறேன். இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேனே என்று மிகவும் மனம் நொந்து

செய்த மனஸ்தாபப்படுகிறேன். எனக்கிதுவே, மனஸ்தாபமில்லாமல் வேறு மனஸ்தாபமில்லை எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறு துக்கமில்லை. இனிமேல் ஒருபொழுதும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை என்று உறுதியான மனதுடனே பிரதிக்கினை செய்கிறேன். மேலும் எனக்குப் பலம் போதாமையால் இயேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப்பலன்களைப் பார்த்து என் பாவங்களை எல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருள்வீர் என்று முழுமனதோடு நம்பியிருக்கிறேன். திருச்சபை விசுவசித்துக் கற்பிக்கிற சத்தியங்களை எல்லாம் தேவரீர் தாமே அறிவித்திருப்பதனால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன். ஆமென்.

## 9. சுருக்கமான உத்தம மனஸ்தாபம்

என் சர்வேசுரா சுவாமி தேவரீர் அளவில்லாத நன்மையும் அன்பும் நிறைந்தவராய் இருப்பதனால் என் பாவங்களால் உமக்குச் செய்த துரோகத்துக்காக உத்தம மனஸ்தாபப்படுகிறேன். இனி உமது வரப்பிரசாதத்தின் உதவியால் இப்பேர்ப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை என்று உறுதியான பிரதிக்கினை செய்கிறேன். ஆமென்.

## 10. பாவசங்கீர்த்தன மந்திரம்

எல்லாம் வல்ல இறைவனிடமும்,
சகோதரரே, உங்களிடமும்.
நான் பாவி என்று ஏற்றுக்கொள்கிறேன்.
ஏனெனில் என் சிந்தனையாலும் சொல்லாலும்,
செயலாலும், கடமையில் தவறியதாலும்,
பாவங்கள் பலசெய்தேன்.
என் பாவமே, என் பாவமே, என் பெரும்பாவமே
ஆகையால், எப்பொழுதும் கன்னியான
புனித மரியாயையும்,
வானதூதர் புனிதர் அனைவரையும்,
சகோதரரே, உங்களையும்
நம் தேவனாகிய ஆண்டவரிட
மெனக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுகிறேன்.

## 11. கிருபைதயாபத்து மந்திரம்

கிருபைதயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே வாழ்க ! எங்கள் சீவியமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே வாழ்க ! பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம். இந்தக் கண்ணீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம். ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே, உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள் பேரில் திருப்பியருளும். இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசம் கடந்த பிற்பாடு, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுநாதருடைய பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும். கிருபாகரியே தயாபரியே, பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே !

முத : இயேசுகிறிஸ்துநாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக.

**துணை :** சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

சர்வ சக்தியுடையவருமாய் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா, முத்திப்பேறு பெற்ற கன்னித்தாயான மரியாயினுடைய ஆத்துமமும் சரீரமும் பரிசுத்த ஆவியின் அனுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கெனவே நியமித்தருளினீரே ! அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவளுடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே இவ்வுலகின் சகல பொல்லாப்புகளிலேயும் நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கும்படிக்குக் கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுகளை யெல்லாம் எங்கள் ஆண்டவரான இயேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

□ □ □



எருசலேம் தேவாலயம்